**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 196/2011**

**Date** :09.04.2026

**பி. வா.சா1-ராஜப்பன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் மாடத்தி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மாடத்தி என்பவருக்கு 2 குழந்தைகள் 1 மகன் மற்றும் 1 மகள் என்றால் சரிதான். மகன் அருணாச்சல மூப்பனார் மகள் ராமலெட்சுமி என்றால் சரிதான். மாடத்தியின் கணவர் சுடலைமுத்து மூப்பனார் என்றால் சரிதான். மேற்படி சுடலைமுத்து மூப்பனார் இறப்பதற்கு முன்பாக எவ்வித பாகப்பிரிவினையும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சுடலைமுத்து மூப்பனார் இறப்பதற்கு முன்பாக எவ்வித பாகப்பிரிவினையும் செய்யாததால் அவர் காலம் சென்ற பின்பு அவரது சொத்துக்கள் அவரது குழந்தைகளுக்கு சேரும் என்றால் ஆண் குழந்தைகளுக்கு சேரும்.

ஆண் குழந்தைகளுக்கு மட்டும் தான் சொத்து சேரும் பெண் குழந்தைகளுக்கு சேராது என்று ஏதேனும் சட்டம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பிரிக்கப்படாத சொத்தினை ராமலெட்சுமி எந்த வருடம் பிரித்து கொடுத்தார் என்றால் தெரியாது. மேற்படி ராமலெட்சுமிக்கு எத்தனை வாரிசுதாரர்கள் என்றால் 6,7 பேர் இருப்பார்கள். மணி, வள்ளியம்மாள், முத்தம்மாள், கல்யாணி, ரேனுகா, சுஜிதா, சுப்பையன், அழகப்பன் ஆகிய அனைவரும் ராமலெட்சுமியின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். மேற்படி 7 வாரிசுதாரர்களும் சேர்ந்து அழகப்பன் என்பவருக்கு வழக்கு பட்டிகை சொத்தினை பொறுத்து பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

மேற்படி பவர் பத்திரத்தை வைத்து தான் அழகப்பன் என்பவர் இவ்வழக்கின் வாதிக்கு

கிரையம் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மாடத்தியின் மகனான அருணாச்சல மூப்பனாருக்கு ராமலெட்சுமியைப் போல் பாதி சொத்து பங்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி அருணாச்சல மூப்பனாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 5 பெண் குழந்தைகள். மேற்படி 5 பெண் குழந்தைகளில் ஒரு பெண் குழந்தையான சங்குமுத்து என்பவரின் மகன் தான் நான் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ 3 ஆவணம் நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 3 1968 ம் வருட ஆவணத்தின் அருணாச்சல மூப்பனார் மற்றும் ராமலெட்சுமிக்கு சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாடத்தியின் வாரிசான ராமலெட்சுமிக்கு தெற்கு திசையில் அருணாச்சலமூப்பனாருக்கு கிழக்கு திசையுமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் பிரிக்கப்படவில்லை. வாசாஆ 1 அழகப்பன் என்பவர் வாதியான முத்தம்மாள் என்பவருக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்து சேதமடைந்த ஓட்டு பனி கட்டிடமும் மின்சார விளக்குகளும் அதற்குறிய மீட்டரும் உட்பட என்று குறிப்பிடப்பட்டுள்யதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாசாஆ 1ல் வழக்கு பட்டிகை சொத்து தெற்கனைய சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 21 ஆவணமான 2025 ம் ஆண்டு எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழில் எனது பெயரும் மற்றும் பிரதிவாதியின் பெயரும் மற்றும் வாதியின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 9 ஆவணமான 2024 ம் ஆண்டு எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழிலும் ராமலெட்சுமியின் 7 வாரிசுதாரர்கள் அழகப்பன் என்பவருக்கு பவர் கொடுத்து அழகப்பன் வாதியான முத்தம்மாளுக்கு எழுதிக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிவாசாஆ 21ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தும் தெற்கனைய சொத்து என்றால்

சரிதான். வாசாஆ 9 எனது பெயர் மற்றும் இதர பிரதிவாதிகள் பெயரிலும் 10.07.2007 ல் அருணாச்சலமூப்பனாரின் குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து கிழக்கனைய சொத்தை எழுதிக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்கனைய சொத்தை மாடத்தியின் வாரிசான ராமலெட்சுமிக்கு, அதன் பிறகு ராமலெட்சுமியின் 8 வாரிசுதாரர்களுக்கும் கிழக்கனைய சொத்தினை அருணாச்சல மூப்பனாரின் வாரிசுதாரர்களான எனக்கும் இதர பிரதிவாதிக்கும் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் மட்டும் தான் சொத்து உள்ளது.

வாசாஆ 2 நிலவரி ரசீது வாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அது மோசடியாக தயார் செய்யப்பட்டது. வாசாஆ 6 தெற்கனைய சொத்தில் பிரதிவாதிகள் அனைவரும் ஆக்கிரமிப்பு செய்ததாக பத்திரக்கையில் கொடுத்த விளம்பரம் அதில் பிரதிவாதிகள் உள்ளே வரக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**